மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
அ.வ.எண். 178 /2022
வா.சா.1

தேதி :6.4.2023

பெயர் : நயினார் த/பெ :
வயது : தொழில் :
கிராமம்: மாவட்டம்:

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2023ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை..</u>

நான் நீதிமன்றத்தில் எனது தகப்பனார் பால் என்பவருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் பால் என்பவர் 21.2.2015ல் காலமாகிவிட்டார். என் அப்பாவிற்கு 2 மனைவிகள். முதல் மனைவி பெயர் வெள்ளையம்மாள், வெள்ளையம்மாள் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். 2ம் மனைவி பெயர் மாடத்தி, எனது தாயார் ஆவார். என் தகப்பனாரின் 2ம் மனைவி மாடத்தி 4.1.21ல் காலமாகி விட்டார். என்தகப்பனார் பாலுக்கும் அவரது முதல் மனைவி வெள்ளையம்மாளுக்கும் கணேசன், செல்லத்தாய் ஆகியோர்கள் குழந்தைகள் ஆவார்கள். கணேசனும், செல்லத்தாயும்இறந்துவிட்டார்கள். கணேசன் 1.5.2017ல் இறந்தார். செல்லத்தாய் 31.10.2018ல் இறந்தார். கணேசனுக்கு 6பிள்ளைகள், சுபா, பாஸ்கரன், ரேகா, முத்துகிருஷ்ணன், பால்கனி, செல்லத்துரை ஆகியோர் கணேசனின் பிள்ளைகள் ஆவார்கள். கணேசனின் மனைவி பெயர் உச்சிமாகாளி. அவர் புளியங்குளத்தில்தான் குடியிருந்து வருகிறார்.

2. என் தகப்பனார் பாலுக்கும் அவரது முதல் மனைவிக்கும் பிறந்த செல்லத்தாயின் கணவர் பெயர் தங்கையா ஆவார். செல்லத்தாய்கும் தங்கையாவுக்கும் லெட்சுமி என்ற ஒரு பெண் குழந்தை உள்ளது. அந்த லெட்சுமியதைான் நான் திருமணம் செய்துள்ளேன். என் தகப்பனார்பாலுக்கும் அவரது இரண்டாவது மனைவி மாடத்திக்கும் நானும் என் தங்கை செல்லத்தாயும் குழந்தைகள் ஆவோம். என் உடன்பிறந்த தங்கை செல்லத்தாயும் இறந்து விட்டார். என் தங்கை செல்லத்தாயும் திருமணமாகாமல் இறந்து விட்டார். நான் வட்டாட்சியரிடம் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு செய்ததில் என் தகப்பனாருக்கு 2 மனைவிகள் உள்ளதால் முறையான

ஆவணங்களையும் முறையான வாரிசுகளையும் தாக்கல் செய்யாத காரணத்தினால் தங்கள் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் முறையான வாரிசுகளை சேர்க்காததால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒ/ம்–சா.முத்துலெட்சுமி, பி.ஏ. எம்.எல்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஸ்ரீவைகுண்டம்.